This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# வண்ணத்துப்பூச்சி வேட்டை

www.writersujatha.com

என் வாழ்வில் இடம்பெறும் நோக்கத்துடன்
வசந்த காலத்தில் வந்து சேருகிறாய். உன்
புன்னகையுடன் சத்தியங்களுடனும்.

– எலிசா பிஷப்.

பிறந்தபோது எனக்கு ராஜலட்சுமி என்று பேர். அதை அப்பாதான் பள்ளியில் சேர்க்கும் போது ரேகா என்று மாற்றிவிட்டார். ராஜலட்சுமி என்றால் நான்கு கைகள் தெரிகிறது என்பார் அப்பா. எனவே ரேகா.

அப்பாவைப் பற்றிச் சொல்ல பல விஷயங்கள் உண்டு. ஜே.என்.யு.வில் நேச்சுரல் ஹிஸ்டரி ப்ரபஸர். என்னைப் படிக்க வைத்தார். விளையாட வைத்தார். எதிர்காலத்தில் நம்பிக்கையும் சுதந்திரமும் வருமானமும் வர தையலிலிருந்து கம்ப்யூட்டர் வரை எல்லா வகுப்புகளிலும் சேர்த்தார். பரதநாட்டியம் ஆடினேன். கொஞ்சம் பாட்டு கற்றுக் கொண்டேன். சித்தார்கூடக் கொஞ்ச நாள் போனேன். ஜப்பானியர் மலர் அமைப்பு. கராத்தே... டில்லியில் உள்ள அத்தனை வகுப்புகளிலும் நான் சேர்ந்து பாதியில் நின்றுகொள்வது கித்வாய் நகர் வட்டாரங்களில் நிலையான ஜோக்காகிவிட்டது.

“ரேகா இந்த வாரம் எந்த கிளாஸ்? முதல் உதவியா? இல்ல இகபானாவா?” என்று சுஷ்மா என்னைச் சந்திக்கும்போதெல்லாம் விசாரிப்பாள். (அவளை நான் கேலி செய்ய எத்தனையோ விஷயங்கள் உள்ளன. புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டும்போது கட்டை விரலில் எச்சில் தொட்டுத் தொட்டுப் பிரிப்பாளே அதை நான் கேலி செய்ய எத்தனை நேரமாகும்!)

உண்மை இதுதான். எனக்கு எந்த கிளாஸிலும் நாட்டமில்லை. அடிப்படையில் நான் சோம்பேறி. எனக்கு உலகை வெல்லும் ஆசையோ, லோட்டஸ் 1–2–3 கற்கும் ஆசையோ கிடையாது. பள்ளிப் பாடம் கூடப் பாஸ் மார்க் வாங்கத்தான் படிப்பேன்.

ஆனால் புத்தகங்கள் கிடைத்தது. கொஞ்ச நேரம் அம்மாவிடமிருந்து அதை எடுத்து வை–இதைக் கொண்டு வா–இதைக் கற்றுக்கொள் தொந்தரவுகள் இல்லாமல் இருந்தால் மணிக்கணக்காகப் படிப்பேன்.

இந்தப் பழக்கம் அப்பாவிடமிருந்து வந்தது. அப்பா பாத்ரூமில் கூடப் படிப்பார்! எந்தப் புத்தகம் என்று கணக்கில்லை. ஏதாவது புத்தகம்.

ஒருமுறை நாங்கள் அப்பாவுடன் செமினாருக்கு லக்னோவுக்குப் போயிருந்தபோது ஓட்டலில் ஏதும் கிடைக்காமல் லக்னோ நகரத்தின் டெலிபோன் டைரக்டரியும் அப்பாவின் செமினார் கட்டுரையான Down The River With Henry Thoreauவையும் படித்துக் கொண்டிருந்தேன் என்றால் நான் எப்படிப்பட்ட பைத்தியம் என்று தெரிந்துக் கொள்ளுங்கள். படிக்கவில்லையென்றால் எனக்குத் தூக்கம் வராது. இதைப் பற்றி அம்மாவுக்கு சம்பிரதாயமான “எப்பப் பார்த்தாலும் புஸ்தகமா? என்னப் பொண்ணு நீ?